# கல்லீரல், கணையம், பித்தப்பை துறைகளை இணைத்து நவீன சிகிச்சை

## மியாட் மருத்துவமனையில் துவக்கம்

சென்னை, மார்ச் 2: மியாட் மருத்துவமனையில் கல்லீரல், கணையம், பித்தப்பை, அறுவை சிகிச்சை மற்றும் உறுப்பு மாற்றுத் துறை புதிதாக தொடங்கப்பட்டுள்ளது.

சென்னை மியாட் மருத்துவமனையில் நேற்று புதிதாக உடல் உறுப்பு மாற்றுத்துறை தொடங்கப்பட்டது. இத்துறையை துவக்கி வைத்த மருத்துவமனையின் நிர்வாக இயக்குனர் டாக்டர் மோகன்தாஸ் பேசியதாவது,



சென்னை மியாட் மருத்துவமனையில், உடல் உறுப்பு மாற்றுத்துறையை மருத்துவமனை நிர்வாக இயக்குனர் டாக்டர் மோகன்தாஸ் நேற்று தொடங்கிவைத்தார். அருகில், தலைவர் மல்லிகா மோகன்தாஸ்.

'மனிதனின் செரிமான அமைப்புகளில் கல்லீரல், பித்தப்பை, மற்றும் கணையம் ஆகியவை முக்கியமான உறுப்புகளாகும். இந்த 3 உறுப்புகளும் மனிதன் ஆரோக்கியமாக இருப்பதற்காக, ஒரு குழுவாக அமைந்து செயல்படுகிறது.

புரதங்களை உற்பத்தி செய்வது, மருந்துகளில் உள்ள நச்சுத் தன்மையை நீக்குவது, உணவுகளை செரிக்க வைப்பது, ரத்தத்தில் உள்ள சர்க்கரை அளவை கட்டுப்படுத்துவது, என எண்ணற்ற செயல்பாடுகளை இந்த 3 உறுப்புகளும் செய்கிறது.

கல்லீரல் என்பது, இதயத்திற்கு ரத்தத்தை அனுப்புவதிலும், அங்கிருந்து பெறுவதிலும், முக்கிய பங்கு வகிக்கும் உறுப்பு.

கணையம் நம் உடல் உறுப்புகளுக்கு தேவையான அமிலங்களை சுரக்கும் சுரப்பிகளின் ஆதாரமாக உள்ளது. தற்போது உள்ள வாழ்க்கை முறை மாற்றத்தால், கல்லீரல், கணையம், பித்தப்பை, ஆகிய உறுப்புகளில் பாதிப்புள்ள நோயாளிகள் அதிகளவில் உள்ளனர். இதனால், மியாட் மருத்துவமனையில் 3 துறைகளை இணைத்து, நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்க நவீன வசதி செய்யப்பட்டுள்ளது. நோயை கண்டறியவும், நோய்க்கு சிகிச்சை அளிக்கவும், சர்வதேச தரத்திலான, டாக்டர்கள் பணியாற்றுகிறார்கள்.

இவ்வாறு அவர் கூறினார்.

நிகழ்ச்சியில், மியாட் மருத்துவமனை தலைவர் மல்லிகா மோகன்தாஸ், இணை நிர்வாக இயக்குனர் பிரித்வி மோகன்தாஸ், கல்லீரல் சிகிச்சைத் துறை தலைவர் டாக்டர் சுரேந்திரன், டாக்டர் ஜார்ஜ் சாண்டி, உள்ளிட்டோர் கலந்துக் கொண்டனர்.